பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.213/2022**

**வா.சா.– 3– வடிவேல் , த/பெ.சண்முகம்**

**நாள். 17.03.2026**

**வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சேதுராமன் எனது நண்பர் ஆவார். சேதுராமன் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சின்னச்சாமி பணம் வாங்கியது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது சொந்த ஊர் ஒட்டன்சத்திரம். சின்னச்சாமிக்கும் எனக்கும் பழக்க, வழக்கம் இல்லை. வா.சா.ஆ.1. தாவா புரோநோட்டில் நான் எழுதியும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். சேதுராமன் பால் வியாபாரம் செய்கிறார். புரோநோட்டை எழுத யார் கூப்பிட்டது என்றால் சேதுராமனும், சின்னச்சாமியும் கூப்பிட்டார்கள். புரோநோட்டை எழுதிய தேதி 15.10.2019 ஆகும். புரோநோட்டை எழுதும் போது பாண்டி, சின்னச்சாமி, சேதுராமன் மற்றும் நான் இருந்தேன். நான் போன போதே சின்னச்சாமியும், பாண்டியும் அங்கு இருந்தார்கள். என்ன விசயமாக புரோநோட்டு எழுதிய தேதியில் நான் சென்றேன் என்றால் சேதுராமன் கோழி வியாபாரம் பார்ப்பார், அது வாங்குவது சம்மந்தமாக சென்றேன். அதற்கு முன்பு சின்னச்சாமியை பார்த்துள்ளேன், பழக்கம் கிடையாது. புரோநோட்டில் உள்ள சின்னச்சாமியின் 4 கையெழுத்துக்களும் வித்தியாசமாக உள்ளது என்றால் இல்லை. சின்னச்சாமி, சேதுராமனிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் என் முன்பு சின்னச்சாமி புரோநோட்டில் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றாலும், நான் சேதுராமன் வீட்டிற்கு போன போது பாண்டியும், சின்னச்சாமியும் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான், பாண்டி, சேதுராமன் ஆகிய மூவரும் சேர்ந்து புரோநோட்டை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சேதுராமன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.17 21:42:00 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.